# வீதிப் பராமரிப்பு நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் - 2011

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத்த தவிர, 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வீதிப் பராமரிப்பு நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டின் அதன் நிதிசார் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் என்பவற்றினை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கமைய நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வெளிப்படுத்துகின்றதென்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1. நிதிக் கூற்றுக்களின் சமர்ப்பிப்பு

நம்பிக்கைப் பொறுப்பு உறுதியின் II ஆம் பிரிவின்படி வருடாந்த நிதிக் கூற்றுக்கள் அடுத்துவரும் ஆண்டு ஏப்ரல் அல்லது அதற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான வருடாந்த நிதிக்கூற்றுக்கள் 2013 யூன் 21 ஆந்திகதியே கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

#### 1.2.2 கணக்காய்வு அவதானிப்புகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நம்பிக்கை பொறுப்பு உறுதியின் 4 ஆம் பிரிவின்படி, நம்பிக்கைப் பொறுப்பின் பிரதான குறிக்கோள்களானது வீதி வலையமைப்பு பாதிப்பிற்குள்ளாவதை தடுப்பதற்காக உரிய நேரத்தில் தேசிய வீதிகளின் வீதிப் பராமரிப்பு நிகழ்ச்சித்திட்டங்களுக்கு ஒழுங்கு முறையாகவும் காலரீதியாக நிதியளிப்பதற்கும் உள்ளது. எவ்வாறாயினும் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் முகாமைத்துவம் மேற்குறிப்பிட்ட பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கு அவர்களுடைய கடமைகளை செயற்படுத்தியிருக்கவில்லை.

(ஆ) நம்பிக்கைப் பொறுப்பு உறுதியின் 19 ஆம் பிரிவின்படி, நிலையான வீதிப் பராமரிப்பு செயற்பாடுகளுக்கு நிதியளித்தல் நம்பிக்கைப் பொறுப்பின் செயற்பாட்டின் செயன் முன்னேற்த்தினை மதிப்பிடுவதற்காகவும் நம்பிக்கைப் பொறுப்பின் செயற்பாடுகளை முற்னேற்றும் வழிகளைப் பரீட்சிப்பதற்காகறும் நிதியத்தின் செயற்பாடுகளை நிதியம் தொடங்கியதிலிருந்து 3 ஆண்டுகளின் பின்னர் மீளாய்வு செய்யப்பட வேண்டும். 2006 சனவரி 1 இலிருந்து அமுலாகும் நம்பிக்கைப் பொறுப்பு செயற்படுத்தப்பட்டிருந்த போதிலும், நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் முகாமைத்துவ சபை நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) நம்பிக்கை பொறுப்பு உறுதியின் 20 ஆம் பிரிவின்படி, நம்பிக்கைப் பொறுப்பின் குறிக்கோள்களை அடைந்துகொள்வது சாத்தியமற்றிருக்கும் வேளையில் நம்பிக்கைப் பொறுப்பு கலைக்கப்பட வேண்டியதுடன் நம்பிக்கைப் பொறுப்பின் சகல பணமும் திரட்டு நிதியத்திற்கு மாற்றப்பட வேண்டும். கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுகளின்படி, மீளாய்வாண்டின் போது எந்தவொரு நிதி மற்றும் பௌதீக செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், நம்பிக்கைப் பொறுப்பு சபை மேற்குறிப்பிட்ட நம்பிக்கைப் பொறுப்பு உறுதியின் வேண்டுகைகளுடன் இணங்கியிருக்கவில்லை.

## 2. நிதிசார் மீளாய்வு

### நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக நிதியத்தின் செயற்பாடுகள் ரூபா 3,481,215 தேறிய மிகையினை விளைவித்திருந்தது.

மீளாய்வாண்டிற்கான பெறுவனவுகள் கொடுப்பனவுகள் மற்றும் தேறிய மிகையை பின்வரும் பொழிப்பு காட்டுகிறது.

| | 2011 |
|---|---|
| | ரூபா மில் |
| திறைசேரியிடமிருந்தான பெறுவனவுகள் | இல்லை |
| வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு செய்யப்பட்ட கொடுப்பனவுகள் | இல்லை |

| | |
|---|---|
| கூட்டு: திறைசேரி உண்டியல் மீதான வட்டி | 3.5 |
| தேறிய மிகைகள் | 3.5 |